கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டி, முடிவுகள் எடுத்து, இந்த மாமன்றத்தின் முன் வைக்க முடியும். இந்த நிலையில் தொடர்ந்து கேள்விகள் கேட்பது, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால், அவ்வளவு உசிதம் இல்லையென்று கருதுகிறேன்.

நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம்

*345 வினா.—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டத்தில், நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அத் திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம்

*346 வினா.—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் மொத்த கடற்கரை நீளம் என்ன?

(இ) இந்து மாசமுத்திரம் தமிழ்நாட்டின் கடற்கரையில் எவ்வளவு நீளம் பரவியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) 992 கி. மீட்டர்.

(இ) குமரிமுனைக்கு அப்பால் உள்ள கடல் இந்துமகா சமுத்திரம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், தமிழ் நாட்டின் கடற்கரை 992 கிலோ மீட்டர் என்று சொன்னார்கள். இந்திய உப கண்டத்திலேயே தமிழ் மாநிலத்திற்குத்தான் இவ்வளவு நீண்ட கடற்கரை இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் இந்தியாவின் கடற் துறை பாதுகாப்பு இருக்க வேண்டும். பதிலாக,

1972 மார்ச் 7]

விசாகப்பட்டணத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, சென்னைத் துறைமுகத்தில் கடற்படையை நிறுவ தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கடற்படை பற்றிய வினுவிற்கு விடையளிக்க முடியாததற்கு வருந்துகிறேன்.

வீட்டு வசதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி

*347 வினு—திரு. ஏ. சுப்ரமணியம் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி பெருக்கத்திற்காக மாநிலங்களுக்கு ஒதுக்கப் பட்ட தொகைகளில் பெரும் பகுதி மாநிலங்கள் பயன்படுத்தாத தால் 'லேப்ஸ்' ஆகிவிட்டது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் நான்காவது திட்ட காலத்தில் எந்த ஒரு தொகையும் தமிழ் நாடு அரசு "லாப்ஸ்" ஆகவிடவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மாநில திட்டங்கள் அனைத்திற்கும் சேர்த்து மொத்த கடனுகவும், மொத்த மானியமாகவும் தான் வழங்குவதேயன்றி வீட்டு வசதிக்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை.

மோதூரிலுள்ள காட்டு நிலங்கள்

* 384—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டுப் பாளையம் தொகுதி, மோதூரில் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான உபயோகமற்ற நிலங்களை விவசாயத் திற்காக நிலமற்ற விவசாயிகட்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.